# சிறுவர் செய்தி

செய்தி : 36 பங்குனி 02 ஞாயிற்றுக்கிழமை (16.03.2014) மாத வெளியீடு இதழ் - 4

## அணு உலையை கண்டு பிடித்த சிறுவன்

பிரிட்டனைச் சேர்ந்த பள்ளி சிறுவன் ஒருவன் அணு உலையை தயாரித்து சாதனை படைத்துள்ளான். இங்கிலாந்தின் லங்கா ஷயர் என்ற பகுதியில் உள்ள பள்ளியில் ஜேமி எட்வர்ட்ஸ் (13வயது) என்ற மாணவன் படித்து வருகிறான்.

இவன் கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் ஆசிரியர்கள் மற்றும் நண்பர்களின் ஒத்துழைப்பால் பள்ளியின் பரிசோதனைக் கூடத்தில் அணுஉலை செய்வதற்கான முயற்சியில் இறங்கினான் இதற்காக மிக கடினமாக உழைத்த ஜேமி தற்போது அணு உலை மாதிரியைத் தயாரித்து சாதனை படைத்துள்ளான்.

இது குறித்து ஜேமி கூறுகையில் நான் உருவாக்கியுள்ள அணு உலை மாதிரியை வைத்து எதிர்காலத்தில் மின்சாரம் தயாரிக்க முடியும் என்றும் அதற்கு பயிற்சி பெற்று வருகிறேன் எனவும் தெரிவித்துள்ளான்.



## எடிசனின் சாமர்த்தியம்....!



விஞ்ஞானி எடிசனின் ஆராய்ச்சிக் கூடத்தின் மையத்தில் ஒரே ஓர் கடிகாரம் வைக்கப்பட்டிருந்தது. நேரம் தெரிய வேண்டி தொழிலாளர்கள் அடிக்கடி அக் கடிகாரத்தைப் பார்த்தனர். இது எடிசனுக்குத் தொந்தரவாகத் தோன்றியது.

நேரம், காலம் பார்க்காமல், கடினமாக உழைத்தவர் எடிசன். மற்றவர்கள் அடிக்கடி கடிகாரத்தைப் பார்ப்பதில் உள்ள அதிருப்தியை வெளிப்படையாக மற்றவர்களிடம் அவர் தெரிவிக்கவில்லை. இந்நிலையில் ஒரு யுக்தியை அவர் செயற்படுத்தினார். ஏராளமான பெரிய கடிகாரங்களை வாங்கி அங்கும், இங்கும் மாட்டிவிட்டார். ஒரு கடிகாரம் போல், இன்னொரு கடிகாரம் நேரம் காட்டவில்லை.

இப்படி எடிசன் குறும்பாகச் செய்ததும் தொழிலாளர்கள் கடிகாரம் பார்ப்பதையே நிறுத்தி விட்டார்கள் தொழிலாளர்கள் நேரம், காலம் பார்க்காமல் உழைக்கலாயினர். உற்பத்தி பெருகியது

## குழந்தைகளுக்கு இசைப் பயிற்சி அளிப்பதால் மூளை பலம் பெறும்



குழந்தைகளின் இளம் பருவத்திலேயே பாடத்தைத் தவிர இசை தனி பயிற்சியாக அளிக்க வேண்டும். அது நாளடைவில் குழந்தைகளின் மூளை பல மடங்காக பலம் பெற உதவுகிறது. மேலும் குழந்தைகளின் ஆர்வத்தை தூண்டுவதற்கும், மூளைக்குச் செல்லும் நரம்புகள் புத்துணர்ச்சி அடைவதற்கும் உதவியாக இருக்கும் என்று ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அதிலும் ஏழு வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு பயிற்சி அளிப்பது அவர்களின் வாழ்நாள் முழுவதும் மறக்க முடியாத நல்ல அனுபவத்தை ஏற்படுத்துவதோடு கற்பனைத் திறனை விரிவடையச் செய்கின்றது என்றும் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

குறைந்த பட்சம் ஒரு வருடமாவது இசைப் பயிற்சி அளிப்பது மூளை பலப்படும். நினைவாற்றல் அதிகரிக்கும் என்று ஆய்வு தெரிவித்துள்ளது.

## பிள்ளைகளின் கருத்துக்களுக்கு மதிப்பளித்தல்

தண்டனைச் சட்டத்தை மீறியதாகக் கூறப்பட்ட, குற்றஞ் சாட்டப்பட்ட ஒவ்வொரு பிள்ளையையும் அதன் கண்ணியத்தையும் மதிப்பையும் மேம்படுத்தும் வகையில் நடத்தப்படல் வேண்டுமென்பதை அரச தரப்பினர் ஏற்றுக் கொள்கின்றனர்.

"எந்தப் பிள்ளையும் சித்திரவதை அல்லது வேறெந்த வகைக் குரூரமான, மிருகத்தனமான அல்லது மானபங்கப்படுத்தக்கூடிய நடத்தைக்கோ தண்டனைக்கோ உட்படுத்தப்படலாகாது....... சுதந்திரம் (*liberty*) பறிக்கப்பட்ட ஒவ்வொரு பிள்ளையும் சுயமரியாதையுடனும், மனிதாபிமானத்துடனும் நடத்தப்பட வேண்டும்.......

பிள்ளைகளின் உரிமைகள் மீண்டும் மீண்டும் தொடர்ந்து மீறப்படும் விடயங்களில் குறிப்பிடத்தக்க ஒன்று சிறுவர் நீதி பரிபாலனமாகும். இது தொடர்பான உதாரணங்கள் ஏராளம். பிள்ளைகளைப் பேணிக் காப்பதற்கான சேமநல ஏற்பாடுகள் இல்லாதிருத்தல் அல்லது செம்மையாகச் செயற் படாதிருத்தல், குற்றச்சாட்டுகள் இல்லாமல் அல்லது சட்ட உதவி இல்லாத படியால் பிள்ளைகளை சிறையில் அடைத்து வைத்தல் அல்லது பிள்ளைகளை வளர்ந்தவர் களுடன் கலந்து அடைத்து வைத்தல், சுகாதாரப் பராமரிப்பு, ஓய்வு, கல்வி வாய்ப்பு என்பன இல்லாது அடைத்து வைத்தல் ஆகியவற்றை இங்கு குறிப்பிடலாம். வெகு அபூர்வமாகவே, புனர்வாழ்வுக் கான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

சுமார் 13 வருடங்களுக்கு முன் சமவாயம் ஏற்றுக் கொள்ளப் பட்டதையடுத்து செம்மையான பாதுகாப்பு, ஆதரவு, புனர்வாழ்வு ஆகியவற்றின் தேவை அதிகமாக உணரப்பட்டுள்ளது. சமவாயத்தின் பல்வேறு உறுப்புரைகளிலே பிள்ளைகளுக்கு



நியாயம் வழங்குதல் பற்றி விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. உறுப்புரை 40 நியாயம் வழங்கலின் நியமங்களை எடுத்துக் கூறுகிறது. உறுப்புரை 37, சுதந்திரம் மறுக்கப்பட்ட பிள்ளைகளின் பாதுகாப்புப் பற்றி விவரிக்கிறது. புனர்வாழ்வு, புனரிணைவு (reinteg ration) ஆகியவற்றுக்கான நடவடிக்கைகளை உறுப்புரை 39ல் காணலாம். சமவாயத்தின் உறுப்புரைகளுக்கு சிறுவர் நீதி பரிபாலனம் தொடர்பான ஏனைய ஐக்கிய நாடுகள் சட்ட திட்டங்கள், வழி முறைகளில் குறிப்பிடப்பட்ட மேலும் விபரமான உறுப்புரைகள் துணையாக அமையும். ஆயினும் சமவாயம் அதற்கு அப்பாலும் செயற்படுகிறது. அதன் உறுப்புரைகளையும் கோட்பாடுகளையும் கூட்டு மொத்தமாகக் கனம் பண்ணிச் செயலாற்றும் போது, பிள்ளைகள் சட்டத்துக்கு முரணான செயல்களில் ஈடுபடாதிருப்பதற்கான உத்தரவாதம் கிடைக்கிறது. எல்லாப் பிள்ளைகளுக்கும் பாதுகாப்பான, ஆதரவான, பொருத்தமான வீட்டு மற்றும் குடும்பச் சூழலை உத்தரவாதம் செய்தால், சுகதேகிககளாக இருப்பதற்கும், பாடசாலை செல்வதற்கும் வாய்ப்பளித்தால், ஏமாற்று, சுரண்டல், இம்சை ஆகியவற்றிலிருந்து பாதுகாப்பளிக்கப்பட்டால் சட்டத்தை மீறும் நடவடிக்கை களில் ஈடுபடும் பிள்ளைகளின் தொகை கணிசமான அளவுக்குக் குறைந்து விடும்.

( சிறுவர் உரிமைகள் சமவாயம் )

# சேர்பொன் இராமநாதன்

சேர் பொன்னம்பலம் இராமநாதன் இலங்கையின் தேசியத் தலைவர்களுள் ஒருவராகக் கருதப்பட்டவர். சிங்களவரும், தமிழரும் இன வேறுபாடுபாராது அவரைத் தங்கள் தலைவராக ஏற்றுக் கொண்டனர்.

பொன்னம்பலம் இராமநாதன் யாழ்ப்பாணம், மானிப்பாயைச் சேர்ந்த இராசவாசல் முதலியார் (கேட் முதலியார்) அருணாசலம் பொன்னம்பலம் என்பவரின் இரண்டாவது புதல்வராக கொழும்பில் பிறந்தார். குமாரசாமி முதலியார், சேர் பொன்னம்பலம் அருணாசலம் ஆகியோரது சகோதரர். ஆரம்பக் கல்வியை கொழும்பு இராணிக் கல்விக் கழகத்தில் கற்றார்.

13 ஆவது வயதில், பிரெசிடென்சி கல்லூரியில் கல்வி கற்பதற்காக சென்னைக்கு அனுப்பப்பட்டார். சேர்றிச்சட் மோர்கனின் கீழ் சட்டக் கல்வி பயின்று 1873இலே பதவி வகித்து 1906ஆம் ஆண்டு, பணி ஓய்வு பெற்றார்.

1879ஆம் ஆண்டு இலங்கையின் சட்ட நிரூபண சபைக்கு உறுப்பினராக இராமநாதன் தெரிவு செய்யப்பட்டார். 1921ஆம் ஆண்டு பிரித்தானிய அரசினால் பிரபுப் பட்டம்(Sir) வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். மிகுந்த சொல்வன்மையும் வாதத் திறமையும் வாய்க்கப்பெற்ற இவர் இலங்கையில் பிரித்தானியரின் பல நடவடிக்கைகளுக்கு எதிராக வாதாடி இலங்கையரின் நலன்களைப் பாதுகாத்தார்.

இவர் அரசியல் மூலம் மக்களுக்குச் செய்த தொண்டுகள் தவிர, சமய, சமூகத் துறைகளிலும் சேவை செய்துள்ளார். இந்துக்களின் கல்வி மேம்பாட்டுக்காக யாழ்ப்பாணத்தில் ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித் தனியாக இரண்டு பாடசாலைகளை நிறுவியுள்ளார். இவற்றில் பெண்கள் பாடசாலையான உடுவிலில் அமைந்துள்ள இராமநாதன் பெண்கள் கல்லூரி இன்றும் யாழ்ப்பணத்தின் முக்கிய கல்லூரிகளிலொன்றாக விளங்கிவருகிறது. ஆண்கள் பாடசாலையான பரமேஸ்வராக் கல்லூரி 1970களின் தொடக்கத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் ஆரம்பிக்கப்பட்டபோது அதன் ஒரு பகுதியாக்கப்பட்டது



அருள்பரானந்த சுவாமிகளின் தொடர்பால் சமயம், தத்துவம், யோகநெறி என்பனவற்றைத் தெளிவாகக் கற்றுணர்ந்தார். கீழைத்தேய மெய்யியல் தூதுவராக 1906இலே அமெரிக்கா சென்று சொற்பொழிவுகளாற்றிப் பெயர் பெற்றார். சைவசித்தாந்த மகாசமாஜத் தின் முதல் மாநாட்டிற்குத் (1906) தலைமை வகித்தார்.

தந்தை கொழும்பு கொச்சிக் கடையிற் கட்டி 1857 நவம்பரிலே குட முழுக்கு செய்வித்த, ஸ்ரீ பொன்னம்பலவாணேசர் கோயில் எழுந்தருளிய இடத்திலே புதியதொரு கோயிலை 1970 ஆம் ஆண்டு கருங்கற் பணியாக ஆரம்பித்து 1912ஆம் ஆண்டு நவம்பர் 21ஆம் திகதி குடமுழுக்கு செய்வித்தார்.

1923ஆம் ஆண்டிலே யாழ்ப்பாணத்திற் சைவ வித்தியா விருத்திச் சங்கம் தோன்றுவதற்குக் காலாக இருந்ததோடு அதன் முதற் தலைவராகவும் பள்ளிக்கூடங்களின் முகாமையாளராகவும் 1926வரை சேவை செய்தார். தொடர்ந்து அதன் போஷகராகவும் விளங்கினார்.

அரசியலில் இவர் நாட்டுக்குச் செய்த சேவையைக் கௌரவிப்பதற்காக கொழும்பில் பழைய நாடாளுமன்ற வளாகத்துக்குள் இவரது சிலை நிறுவப்பட்டுள்ளது.

# பிறருக்கு உதவுவோம்

மனிதப் பண்புகளில் முதலிடம் பெறுவது உதவி செய்வது என்னும் பண்பாகும். ஒருவருக்கு இயலாமை ஏற்படுகின்றபோது அவருக்கு உதவி செய்யும் போது இருவருமே மனதளவில் சந்தோசமடைகின்றார்கள். மக்கள் ஒருவருக்கு ஒருவர் உதவி செய்கின்ற தன்மையை தமது மனத்திலே வளர்த்துக் கொள்கின்ற போது ஒரு சுமுகமான சமுதாயம் தோன்றுவதற்கு வழி சமைக்கின்றது.

சிறுவர்களாகிய நீங்கள் சக நண்பர்களாய் இருந்தாலும் சரி, முதியவர்களாக இருந்தாலும் சரி, சிறுவர்களாயிருந்தாலும் சரி அவர்கள் துன்பப்படுகின்ற போது அவர்களுக்கு உற்ற துணையாக இருந்து உதவியினைச் செய்தல் வேண்டும். அவ்வாறு நீங்கள் உதவி செய்கின்ற போது எந்த ஒரு பிரதி பலனையும் மற்றவர்களிடம் எதிர்பார்க்கக் கூடாது. தகுந்த நேரத்தில் நீங்கள் செய்கின்ற உதவி அவர்களுக்கு பெரிய விடயமாகத் தோன்றிவிடும். இதனையே வள்ளுவர்



"காலத்தால் செய்த நன்றி சிறிதெனினும்

ஞாலத்தில் மானப் பெரிது"

என்கிறார்.

உங்களுக்கு தெரிந்த கல்வி விடயங்களை மற்றவர்களுக்கு சொல்லிக் கொடுத்து உதவி செய்கின்றபோது அவர்களிடத்து உண்மையான உறவு நிலைத்து நிற்கும். கல்வி அறிவு மட்டுமல்ல உங்களது நண்பர்கள் நோய், நொடி, துன்பம் வந்து துவழ்கின்ற போது மனங்கோணாது அவர்களை எடுத்தெறிந்து பேசாது, அவர்களோடு சேர்ந்து திரிவதை விடுத்தல் போன்ற பண்புகளை வளர்த்துக் கொள்ளக் கூடாது. மற்றவர்களுக்கு துன்பம் நேருகின்ற போது உங்களது துன்பமாக கருதி அவர்களுக்கு உதவி ஒத்தாசைகள் செய்து சிறந்த நல்ல மனிதப் பண்புள்ள மனிதன் என்பதை எடுத்துக் காட்ட வேண்டும்.

ஒருவருக்கு நீங்கள் உதவி செய்கின்ற போது உங்களுக்கு உதவி தேவைப் படும் சந்தர்ப்பங்களில் அவர்கள் தாமாகவே முன்வந்து உதவி செய்வார்கள் உண்மையான நண்பர்கள். உண்மையான உறவினர்கள் உங்களுக்கு உதவி தேவைப்படும் சந்தர்ப்பங்களில் அவர்கள் தாமாகவே முன்வந்து உதவி செய்வார்கள். உண்மையான நண்பர்களை, உண்மையான உறவினர்களை உங்களுக்கு உதவி தேவைப் படும் காலங்களில் உணர்ந்து கொள்ளலாம். இதனையே ஔவையார் வாக்குண்டாம் என்ற பாடலில் "அற்ற குளத்தில் அறுநீர்ப் பறவை போல், உற்றுழித் தீர்வார் உறவல்லர் அக் குளத்தில் கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே ஒட்டி உறுவார் உறவு"

எனக் கூறியிருக்கின்றார். நீர்வற்றிய குளத்தில் இருந்து நீங்கிச் செல்கின்ற நீர்வாழ் பறவைகள் போல, ஒருவருக்கு துன்பம் வந்த போது உதவி செய்யாது இருப்பவர்கள் உண்மையான உறவினர் அல்ல எனவும் அதேபோல் நீர் வற்றிய பின்பும் குளத்தில் இருக்கின்ற கொட்டி, ஆம்பல், நெய்தல் மரங்கள் போல் ஒருவருக்குத் துன்பம் வந்த போது அவர்களை விட்டுச் செல்லாது அவர்களுடன் இருந்து உதவி செய்பவர்களே உண்மையான உறவினர்கள் எனக் குறிப்பிடுகின்றார்.

எனவே சிறுவர்களாகிய நீங்கள் மற்றவர்களுக்கு உதவி செய்தல், என்னும் மனநிலையை உங்களிடத்தில் வளர்த்து நாட்டில் நல்ல பிரஜையாக வாழ வேண்டும்.

சோ.கிருபாலினி


## பெண்

உலகில் பிறந்த உன்னத படைப்பபா பெண்
அவள் இல்லையேல் இவ் அற்புத உலகம் ஏதடா?
செல்ல மகளாய் அவள் எடுத்து வைத்த பாதங்கள்
அவள் சென்ற இடமெல்லாம் புகழ் மாலை கோலங்கள்
தெய்வங்களும் வீட்டிற்கு வருவதில்லை ஆனால்
தேவதையின் ரூபமே இப் பெண்தானடா
காலம்காலமாய் போற்றும் பெருமை பெண்ணை
காவியமாய் புகழ்வதில் எதற்கு அச்சமடா
தாலாட்டுப் பாடும் போது தங்க தாயுமவளடா நாம்
தண்டனை செய்தால் காளியும் அவளடா
பேதை என்ற பெண்ணை நினைக்கும் மானிடரே
பெண்ணின் புகழ் இன்றும் உனக்கு புரியவில்லை
வாழ்க்கை எனும் வானவில்லை வண்ணமாய்
வடிவமைக்கும் பெண்ணின் பெருமை
போனது போகட்டும் வாழ்வில் வசந்தமாய்
ஒளி வீசும் பெண் கவிதையை பொக்கிசமாய் பாதுகாப்போம்.

உதயசூரியன்- வதுஸ்கா
மட்/ ஆரையம்பதி இராம திருகஷ்ணமிஷன் ம.வி.
மட்டக்களப்பு
தரம் - 07

## இலங்கை

இலங்கையின் அதிகாரபூர்வ பெயர் :-
இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு
இலங்கை தேசிய கீதம்:-
ஸ்ரீலங்கா மாதா
தேசிய கீதத்தை இயற்றியவர்:-
ஆனந்த சமரக்கோன்
தமிழில் மொழி பெயர்த்தவர்:-
புலவர் நல்லதம்பி
ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர்:-
c.w.w. கன்னங்கரா
இலங்கையின் மொத்தப் பரப்பு:-
65,610 சதுர km
இலங்கையின் சுற்றளவு:-
1340 kg
இலங்கை சுதந்திரம் பெற்ற ஆண்டு:-
1948.02.04
இலங்கை குடியரசான ஆண்டு:
1972.05.25
அதிகாரபூர்வ மொழி:-
சிங்களம், தமிழ்
தலைநகரம்:-
ஸ்ரீ ஜெயவர்த்தனபுர கோட்டே
பெரிய நகரம்:-
கொழும்பு



## கொன்றை வேந்தன் KONRAI VENTHAN

**நொ**

**நொய்யவர் என்பவர் வெய்யவர் ஆவார்.**

Those who have mean, belittling qualities will certainly resort to violence, or those who may appear to be small in stature yet shall be honored on the merit of their actions.

**கருத்து :** சிறுமைக் குணமுள்ளவர்கள் கொடுமை யானவர்களாக இருப்பார்கள். அதேபேல ஒருவர் உருவத்தில் சிறியவராக இருப்பினும் அவரது செயல்களின் அடிப்படையில் எல்லோராலும் விரும்பி மதிக்கப் படுபவராக இருப்பார்.



**நோ**


**நோன்பென்பதுவே கொன்று தின்னாமை**

To be free from killing an animal and eating its flesh constitutes the best of spiritual practices.

**கருத்து:** ஒரு உயிரைக் கொன்று அதன் இறைச்சியைச் சாப்பிடாமல் இருப்பது நோன்பு ஆகும்

## கங்காரு


ஒரு கங்காரு தன் நான்கு கால்களையும் தூக்கிய படி தன் வாலின் மீது மட்டுமே நிற்க முடியும்! அதன் வால் அவ்வளவு உறுதியானது! கங்காரு வேகமாகப் பாய்வதற்கு அதன் வாலும் உதவுகிறது. அதன் வால் உயர்ந்தால், அது வேகமாகப் பாயப் போகிறது என்பது பொருள். வாலை இழந்து விட்டால் அதனால் சரியாக நடக்கக் கூட முடியாது.



## இரத்தம் எந்த வேகத்தில் பாய்கிறது என்று உங்களுக்குத் தெரியுமா?

உங்களுடைய இதயம் ஒரு அற்புதமான இயந்திரம். உங்களது உடலின் எல்லா பாகங்களுக்கும் ரத்த நாளங்கள் மூலம் ரத்தத்தை இதயம் அழுத்தி அனுப்புகிறது. உங்களுடைய உடல் நலத்திற்கு ஏற்ப ரத்தத்தின் வேகம் உள்ளது. உடற்பயிற்சி இதயத்தை அதிக அழுத்தத்தில் செயல்படச் செய்வதால் ரத்தத்தை வேகமாக பாயச் செய்கிறது.

இரத்தம், இதயத்னதி வழியாகப் பாய் வதற்கு $1\frac{1}{2}$ வினாடிகள் எடுத்துக் கொள்கிறது. அது இதயத்திலிருந்து நுரையீரலுக்கும், நுரையீர லிலிருந்து இதயத்திற்கும் திரும்பி வர 6 வினாடிகள் எடுத்துக் கொள்கிறது. இதயத் திலிருந்து மூலைக்குப் போய் திரும்பி வருவதற்கு 8 வினா டிகள் எடுத்துக் கொள்கிறது.



மிக அதிகதூரம் ரத்தம் பிரயாணம் செய்வது கால் முனைக்கு, இதயத்திலிருந்து கால் முனைக்கு சென்று திரும்பி வருவதற்கு 18 வினாடிகள் எடுத்துக் கொள்கிறது.



## ஆங்கிலச் சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| **Towards** | - நோக்கி | **Every day** | - ஒவ்வொரு நாளும் |
| **Upwards** | - மேல் நோக்கி | **Some time** | - எப்போதாவது |
| **Although** | - இருப்பினும் | **Some thing** | - ஏதோ கொஞ்சம் |
| **Even though** | - இருந்தாலும் | **Some times** | - சிலநேரங்களில் |
| **Anyway** | - எவ்வகையிலேனும் | **Some one** | - யாரோ ஒருவர் |
| **Anytime** | - எப்போதும் | **Some how** | - எப்படியாவது |
| **Anything** | - ஏதாவது ஒன்று | **Upstairs** | - மேல்மாடியில் |
| **Any body** | - யாரேனும் ஒருவர் | **Some what** | - சிறிதளவு |
| **Every thing** | - ஒவ்வொரு பொருளும் | | |

1. இணையத்தளத்தின் தந்தை எனப்படுபவர் யார் ?
2. காலை நட்சத்திரம் என அழைக்கப்படுவது ?
3. அமைதிக்கடல் என அழைக்கப்படுவது?
4. கொம்புடன் பிறக்கும் உயிரினம் எது ?
5. திருக்குறளில் இல்லாத ஒரே எழுத்து ?

இவ் வினாக்களுக்கான விடை அடுத்த இதழில்......

**சென்ற மாத வினாக்களுக்கான விடைகள்**

1. 14,89,50,800 சதுர கி.மீ 2. 224 3. சீன மொழி
4. டோக்கியோ 5. குளவி

## தன்னம்பிக்கையை அதிகரியுங்கள்

ஒரு குழந்தைக்கு வரைவதில் அதிகம் விருப்பம் இருக்கலாம், ஒரு குழந்தைக்கு கணிதத்தில் விருப்பம் இருக்கலாம். அதற்காக இதே போன்ற அனைத்து பாடத்திலும் சிறந்து விளங்க வேண்டும் என்பது கட்டாயமல்ல என்பதனை புரிந்து கொள்ளுங்கள். எந்த பாடத்தில் குழந்தைக்கு அதிக விருப்பம் இருக்கிறதோ, அந்த பாடத்தில் மேலும் சிறந்து விளங்க ஆர்வத்தை அதிகப்படுத்த வேண் டும். சிறு சிறு சிறப்பான செயற் பாடுகளையும் பாராட்ட வேண்டும். அந்த பாராட்டுக்கள் மேலும் வளர்வதற்கு உற்சாகம் அளிக்கும்

## சிரிக்கலாம் வாங்க

**ஒருவன்:-** மாவீரன் நெப்போலியனுக்கு "பயம்னா என்னன்னே தெரியாது"
"அப்படியா! ஏன்?
அவருக்குத் தமிழ் தெரியாதே"

**ஆசிரியர்:-** "கலர் கலரா பட்டம் விடுற நூலை எதுக்கடா ஸ்கூலுக்கு கொண்டு வந்திருக்கே?"

**மாணவன்:-** "உங்க வீட்ல இருக்கிற நல்ல நூல்களை நாளை பள்ளிக்கு வரும் போது கொண்டு வாங்கன்னு நீங்க தானே சேர் சொன்னீங்க

# தபோல்கரின் தியாகம்






உ.வதுஸ்கா
தரம் – 07
மட்/ஆரையம்பதி இராம கிருஷ்ண மிசன் மகா வித்தியாலயம்

## உலகத்தில் மிக உயரமாக பறக்கக் கூடிய பறவை



உலகத்தில் மிக உயரமாக பறக்கக்கூடிய பறவை பார் ஹீதேத் கூசே Bar Headed Goose ஆகும். இது ஆச்சரியப்படத்தக்க 10,175m (33,382 Feet) பறக்க வல்லது. இதனால் வருடத்துக்கு 3 -8 முட்டைகளை இடும். இதனால் ஒட்சிசன் மிகக் குறைந்த இடத்தில் சுவாசிக்கவும் அதனுடைய உடல் வெப்ப நிலையை இழக்கமால் கட்டுப்படுத்தவும் முடியும். இதனால் ஒரு நாளைக்கு 1000 மைல் தூரத்தை ஜெற் வேகத்தில் பறக்க முடியும் இதனுடைய நீளம் 7176 cm (28 - 30 in) உம் நிறை 1.87 - 3.2 kg ஆகும்.



க.சந்திரபானு
தரம் – 03
ஆரயம்பதி
மட்/சிவமணி வித்தியாலயம்

**அண்டங் காக்கை Large - billed Crow**
**Corvus macrorhynchos**



48 செ.மீ. பளபளப்பான கறுப்பு நிறமான இறக்கையொழுங்கு, பெரிய கடினமான அலகு, பட்டணங்கள், நகரங்கள் கிராமங்கள், காடுகள் ஆகியவற்றில் காணப்படும்.

"சிறுவர் செய்தி" பத்திரிகையில் உங்கள் ஆக்கங்கள் இடம் பெற வேண்டுமா? அப்படியாயின் உங்கள் கதை , கவிதை, கட்டுரை, சித்திரம், நற்கருத்துக்கள் போன்ற சிறுவர்களுக்கான சிறந்த விடயங்களை எழுதி அனுப்புங்கள்.
அனுப்ப வேண்டிய முகவரி

**"சிறுவர் செய்தி"**
**"சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையம்"**
**இல 60A, பழைய பூங்கா வீதி,**
**யாழ்ப்பாணம்.**
childnews4@gmail.com
www.cfcdjaffna.org

சிறுவர் செய்தி 60 A பழைய பூங்கா வீதி, கண்டுக்குளி, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலுள்ள சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையத்தினால் 16.04.2014 ஞாயிற்றுக்கிழமை அன்று வெளியிடப்பட்டது.

*அச்சுப் பதிப்பு:* ஜெயஸ்ரீபிறிண்டேர்ஸ் யாழ்ப்பாணம். 021 221 9129